பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

முன்னுரை 15

1 திருக்குர்ஆனைத் தொகுத்தல் என்பதன் பொருள் 17

2 திருக்குர்ஆனைப் பாதுகாத்தல் 20

திருக்குர்ஆன் வானத்தில் பாதுகாக்கப்பட்ட விதம் 20

திருக்குர்ஆன் பூமிக்கு வரும் வழியில் பாதுகாக்கப்பட்ட விதம் 21

திருக்குர்ஆன் பூமியில் பாதுகாக்கப்படுதல் 22

அல்லாஹ் குர்ஆனைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட சில வழிமுறைகள் 30

3 நபியவர்களின் காலகட்டத்தில் திருக்குர்ஆனை எழுதப்பட்டதா? 34

வஹ்யியை எழுதக்கூடியவர்கள் 38

வஹ்யி எந்தப் பொருள்களிலெல்லாம் எழுதப்பட்டது? 40

நபியவர்களின் காலத்தில் திருக்குர்ஆன் எழுதப்பட்ட விதம் 40

நபியவர்களின் காலத்தில் ஒரே பிரதியாக திருக்குர்ஆன் ஒன்றுசேர்க்கப்படாததற்கான காரணம் 41

4 அபூ பக்ர் ﷺ அவர்களின் காலத்தில் திருக்குர்ஆன் ஒன்றுசேர்க்கப்படுதல் 43

திருக்குர்ஆனைப் பாதுகாக்க நபித்தோழர்கள் மேற்கொண்ட முயற்சி 45

உமரின் ஆலோசனையை ஏற்பதில் அபூ பக்ருக்கு ஏற்பட்ட தயக்கத்திற்கான காரணம் 46

அபூ பக்ரின் காலத்தில் திருக்குர்ஆன் தொகுக்கப்பட்டதற்கான காரணம் 47

ஸைது இப்னு ஸாபித் ﵁ தெரிவு செய்யப்படுவதற்கான காரணம் 47

அபூ பக்ரின் காலத்தில் திருக்குர்ஆன் ஒன்றுசேர்க்கப்பட்ட வழிமுறை 48

திருக்குர்ஆன் தொகுக்கப்பட்ட கால அளவு 50

திருக்குர்ஆன் தொகுக்கப்பட்டதன் சில தன்மைகள் 51

முஸ்ஹஃப் என்ற பெயரிடப்படுவதற்கான காரணம் 51

இந்த முஸ்ஹஃபைக் குறித்து 52

5 உஸ்மான் இப்னு அஃப்ஃபான் ﵁ காலகட்டத்தில் திருக்குர்ஆன் தொகுக்கப்படுதல் 53

உஸ்மான் இப்னு அஃப்ஃபானின் காலத்தில் திருக்குர்ஆன் தொகுக்கப்பட்டதற்கான காரணம் 57

உஸ்மான் இப்னு அஃப்ஃபானின் காலத்தில் திருக்குர்ஆன் தொகுக்கப்பட்ட வழிமுறை 57

பிரதிகளை நகரங்களில் பரப்புதல் 59

பிழையுள்ள பிரதிகளை நபித்தோழர்களின் அனுமதியோடு எரித்தல் 60

இந்தப் பிரதிகளைப் பற்றிய சில செய்திகள் 61

முடிவுரை 63

1

திருக்குர்ஆனைத் தொகுத்தல் என்பதன் பொருள்



திருக்குர்ஆனை தொகுத்தல் என்பதற்கு அறபி மொழியில் جَمْعُ الْقُرْآنِ الْكَرِيمِ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அகராதியின்படி ஒன்றோடொன்று சேர்த்தல், தொகுத்தல் என்று பொருள். இஸ்லாமிய வழக்கில் இச்சொல் 'உலூமுல் குர்ஆன்' என்று சொல்லப்படக்கூடிய குர்ஆன் சார்ந்த அறிவுகளில் இரு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. ஒன்று, நெஞ்சங்களில் மனனம் செய்தல். பின்வரும் குர்ஆன் வசனம் இதற்குச் சான்று:

إِنَّ عَلَيْنَا جَمْعَهُ وَقُرْآنَهُ

'இதனை உம் உள்ளத்தில் பாதுகாப்பதும் ஓதச் செய்வதும் நமது பொறுப்பாகும்.' (குர்ஆன் 75:16)

இரண்டு, எழுதுதல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. திருக்குர்ஆனைத் தொகுத்தல் தொடர்பாக புகாரீயில் இடம் பெற்றுள்ள சம்பவம் இதற்கான ஆதாரமாகும். அதில் உமர் ﵁ அபூ பக்ரைப் பார்த்து

وَإِنِّي أَرَى أَنْ تَأْمُرَ بِجَمْعِ الْقُرْآنِ

'நீங்கள் குர்ஆனை எழுதுவதற்கு உத்தரவிடுங்கள் என்று நான் ஆலோசனை கூறுகிறேன்' என்றார். (அறிவிப்பு: ஸைது இப்னு ஸாபித் ﵁, புகாரீ 4986)

அபூ பக்ர் ﵁ ஸைது இப்னு சாபித்திடம் கூறினார்,

فَتَتَبَّعْ الْقُرْآنَ فَاجْمَعْهُ

'குர்ஆனை ஒன்றுசேர்த்து எழுதுவீராக.' (அறிவிப்பு: ஸைது இப்னு ஸாபித் ﵁, புகாரீ 4986)

2

திருக்குர்ஆனைப் பாதுகாத்தல்



திருக்குர்ஆன் வானத்தில் பாதுகாக்கப்பட்ட விதம்

இறைவேதமான திருக்குர்ஆன் வானத்தில் இருந்தபோதும் பாதுகாப்பாகவே இருந்தது. இந்த உண்மையை அல்லாஹ் சத்தியமிட்டுப் பின்வருமாறு கூறுகிறான்:

فَلَا أُقْسِمُ بِمَوَاقِعِ النُّجُومِ وَإِنَّهُ لَقَسَمٌ لَوْ تَعْلَمُونَ عَظِيمٌ إِنَّهُ لَقُرْآنٌ كَرِيمٌ فِي كِتَابٍ مَكْنُونٍ لَا يَمَسُّهُ إِلَّا الْمُطَهَّرُونَ تَنْزِيلٌ مِنْ رَبِّ الْعَالَمِينَ

‘நட்சத்திரங்கள் உதிக்குமிடங்கள் கொண்டு நான் சத்தியம் செய்கிறேன். நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்களானால் இது மகத்தான சத்தியமாகும். மனிதர்களே! நிச்சயமாக உங்களிடம் எடுத்துரைக்கப்படும் இந்தக் குர்ஆன் தன்னுள் உள்ளடக்கியுள்ள பெரும் நன்மைகளினால் கண்ணியமிக்க குர்ஆனாகும். அது மக்களின் பார்வையைவிட்டும் பாதுகாப்பட்ட லவ்ஹுல் மஹ்ஃபூல் என்னும் ஏட்டில் பாதுகாக்கப்பட்டுள்ளது. பாவங்கள் மற்றும் குறைகளைவிட்டும் தூய்மையான வானவர்கள்தாம் அதனைத் தொடுவார்கள். அது படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனிடமிருந்து அவனுடைய தூதர் முஹம்மதுமீது இறக்கப்பட்டதாகும்.’ (குர்ஆன் 56:75-80)

فِي صُحُفٍ مُكَرَّمَةٍ مَرْفُوعَةٍ مُطَهَّرَةٍ بِأَيْدِي سَفَرَةٍ كِرَامٍ بَرَرَةٍ

‘இந்தக் குர்ஆன் வானவர்களிடத்தில் கண்ணியமான ஏடுகளில் உள்ளது. அவை உயரமான இடத்திலிருக்கும் உயர்வானவை; அசுத்தம் எதுவும் அண்டாத அளவுக்குத் தூய்மையானவை. அவை வானவர்களின் கைகளில் இருக்கின்றன. அவர்கள் தங்கள் இறைவனிடத்தில் கண்ணியமானவர்கள், நன்மையான செயல்களை அதிகம் செய்யக்கூடியவர்கள்.’ (குர்ஆன் 80:13-16)

3

நபியவர்களின் காலகட்டத்தில் திருக்குர்ஆனை எழுதப்பட்டதா?

திருக்குர்ஆனை மனனம் செய்தல், தம் தோழர்களுக்கு ஓதிக்காட்டுதல், அவர்களைக் கற்பதற்கும் கற்றுக் கொடுப்பதற்கும் ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றோடு நபியவர்கள் நின்றுவிடவில்லை. மாறாக, அதனை எழுதுவதன் பக்கமும் கவனம் செலுத்தினார்கள். திருக்குர்ஆனிலிருந்து ஏதேனும் ஒரு வசனமோ அத்தியாயமோ இறங்கினால், எழுதக்கூடியவர்களை அழைத்து அதனை எழுதச் சொல்வார்கள். இவ்வாறு நபியவர்களின் காலத்திலேயே திருக்குர்ஆன் எழுத்து வடிவில் தொகுக்கப்பட்டுவிட்டது. இதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு நான் குறிப்பிடுகிறேன்:

1. 'அல்-கிதாப்' என்ற வார்த்தை திருக்குர்ஆனில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக அல்-பகறா அத்தியாயத்தின் இரண்டாவது வசனத்தைப் பாருங்கள்,

   ذَٰلِكَ الْكِتَابُ لَا رَيْبَ فِيهِ

   மகத்துமிக்க இந்தக் குர்ஆன் மூலத்தின் அடிப்படையிலும் பொருளின் அடிப்படையிலும் எவ்வித சந்தேகமும் அற்றது. *(குர்ஆன் 2:2)*

   அல்-கிதாப் என்றால் அல்-மக்தூப் – எழுதப்பட்டது என்று பொருள்.

2. திருக்குர்ஆனின் உறுதியான பண்புகளில் எழுதப்பட்டது என்பதும் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகிறான்,

   رَسُولٌ مِنَ اللَّهِ يَتْلُو صُحُفًا مُطَهَّرَةً فِيهَا كُتُبٌ قَيِّمَةٌ

   இந்தத் தெளிவான ஆதாரம் என்பது அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதராவார். அவர் தூய்மையானவர்கள் மட்டுமே தொடக்

6. ஸாபித் இப்னு கைஸ் இப்னு ஷம்மாஸ்
7. முகீறா இப்னு ஷு அபா
8. முஆது இப்னு ஜபல்

வஹ்யி எந்தப் பொருள்களிலெல்லாம் எழுதப்பட்டது?

வஹ்யியை எழுதக்கூடியவர்கள் அக்காலத்தில் இலகுவாகக் கிடைத்த பொருள்களிலெல்லாம் வஹ்யியை எழுதினார்கள். அவற்றுள் சில:

1. தோல். ஸைது இப்னு ஸாபித் கூறுகிறார்:

كُنَّا عِنْدَ رَسُولِ اللهِ - صلى الله عليه وسلم - نُؤَلِّفُ الْقُرْآنَ مِنْ الرِّقَاعِ

'நாங்கள் நபியவர்களிடமிருந்து தோல்களில் குர்ஆனை தொகுத்துக் கொண்டிருந்தோம்.' (அஹ்மது 21646, ஸஹீஹ் ஜாமிஃ 3920)

2. விலங்குகளின் அகலமான எலும்புகள். சுயூத்தீ கூறுகிறார்:

'அவை ஒட்டகம் மற்றும் ஆடுகளின் எலும்புகளாக இருந்தன.' (அல்இத்கான் ஃபீ உலூமில் குர்ஆன்)

குர்ஆனைத் தொகுக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்ட ஸைது இப்னு ஸாபித் கூறுகிறார்:

فَتَتَبَّعْتُ الْقُرْآنَ أَجْمَعُهُ مِنْ الرِّقَاعِ وَالْأَكْتَافِ وَالْعُسُبِ وَصُدُورِ الرِّجَالِ

'நான் குர்ஆனைச் சேகரிக்க ஆரம்பித்தேன். தோல்கள், விலங்குகளின் எலும்புகள், பேரீச்ச மட்டைகள், மனிதர்களின் நெஞ்சங்கள் ஆகியவற்றிலிருந்து நான் சேகரித்தேன்.' (புகாரீ 4402)

3. பேரீச்ச மட்டைகள்
4. கற்களின் தட்டையான மேற்பகுதி
5. ஒட்டகத்தில் இருக்கைக்காக வைக்கப்படும் மரக்கட்டைத்துண்டு

இவை தவிர பலகைகள், ஏடுகளிலும் எழுதப்பட்டன.

நபியவர்களின் காலத்தில் திருக்குர்ஆன் எழுதப்பட்ட விதம்

நபியவர்களின் காலத்தில் திருக்குர்ஆன் மனனம் மட்டும் செய்யப்படவில்லை. மாறாக, பின்வரும் வடிவில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுவிட்டது என்பதை நம்மால் உறுதியாகக் கூற முடியும். அதன் சில பண்புகள் பின்வருமாறு:

4

அபூ பக்ர் ﵁ அவர்களின் காலத்தில் திருக்குர்ஆன் ஒன்றுசேர்க்கப்படுதல்

நபியவர்களின் மரணத்திற்குப் பின்னர் அபூ பக்ர் ﵁ ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அப்போது புதிதாக இஸ்லாமை ஏற்றிருந்த சில அறபுக் கோத்திரங்கள் இஸ்லாமைவிட்டும் மதமாறின. ஸகாத் தர மறுத்தன. அவர்களுக்கெதிராகப் போரிடுவதற்காக அபூ பக்ர் ஒரு படையை தயார்செய்தார். காலித் இப்னு வலீதின் தலைமையில் ஒரு படையை யமாமா நோக்கி அனுப்பினார். இது ஹிஜ்ரீ 12இல் நடைபெற்ற போராகும். இரு படையினருக்குமிடையே கடுமை யான சண்டை நடந்தது. இறுதியில் பொய்யன் முஸைலமாவும் அவனது கூட்டத்தினரும் தோற்கடிக்கப்பட்டனர். இஸ்லாமை விட்டுப் பின்வாங்கியவர்கள் மீண்டும் இஸ்லாமில் இணைந்தார்கள். அதில் நபித்தோழர்கள் பெருமளவில் ஷஹீதாக்கப்பட்டார்கள். ஷஹீதாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 500 என்றும் 670 என்றும் 700 என்றும் கூறப்படுகிறது. அவர்களில் குர்ஆனை மனனம் செய்தவர்களும் இருந்தார்கள். அவர்களில் 'குர்ஆனை இவரிடம் கற்றுக்கொள்ளுங்கள்' என்று நபியவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட சாலிம் மௌலா அபீ குதைஃபாவும் ஒருவர். உமர் இப்னுல் கத்தாப் ﵁ இதன் தீவிரத்தை உணர்ந்தார். குர்ஆனை மனனம் செய்தவர் களின் இழப்பால் குர்ஆனின் சில பகுதிகள் காணாமல் போய்விட லாம் என அவர் பயந்தார். எனவே, பல்வேறு பொருள்களில் எழுதப்பட்ட குர்ஆனை ஒரே பிரதியில் ஒன்றுசேர்க்குமாறு அபூ பக்ருக்கு ஆலோசனை வழங்கினார். ஸைது இப்னு ஸாபித் ﵁ கூறுகிறார்:

أَرْسَلَ إِلَيَّ أَبُو بَكْرٍ مَقْتَلَ أَهْلِ اليَمَامَةِ، فَإِذَا عُمَرُ بْنُ الخَطَّابِ عِنْدَهُ، قَالَ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: إِنَّ عُمَرَ أَتَانِي فَقَالَ: إِنَّ القَتْلَ قَدْ اسْتَحَرَّ يَوْمَ اليَمَامَةِ بِقُرَّاءِ القُرْآنِ، وَإِنِّي أَخْشَى أَنْ

ஏற்கனவே எழுதப்பட்டவற்றை ஒன்றுசேர்க்கவே அபூ பக்ர் உத்தரவிட்டார். அவரது இந்தச் செயலைச் சரியாக அணுகுபவர் அவரது சிறப்புகளையும் அவர் பின்வரும் நபிமொழிக்கேற்பவே செயல்பட்டுள்ளார் என்பதையும் அறிந்துகொள்வார்:

مَنْ سَنَّ فِي الإِسْلاَمِ سُنَّةً حَسَنَةً فَلَهُ أَجْرُهَا وَأَجْرُ مَنْ عَمِلَ بِهَا

'யார் இஸ்லாமில் ஒரு நல்ல வழிமுறையைத் தோற்றுவிக்கிறாரோ அவருக்கு அதன் கூலியும் அதனைச் செய்தவர்களுக்குக் கிடைக்கும் கூலியும் உண்டு.' (அறிவிப்பு: ஜரீர் ﷺ, முஸ்லிம் 1017) - இப்னு ஹஜர் கூற்று முடிந்தது.

ஆகவே, அபூ பக்ரின் செயல் மார்க்கத்தில் இல்லாத புதுமையான ஒன்றல்ல. நபித்தோழர்களின் ஒருமித்த கருத்தும் அவர்களின் பங்களிப்புமே இதற்கு ஆதாரமாக அமைவதற்குப் போதுமானதாகும். இதனை அலீ இப்னு அபூ தாலிப் பின்வருமாறு வெளிப்படுத்தினார், 'குர்ஆனின் விசயத்தில் அனைவரையும்விட அபூபக்கரே அதிக நன்மைகளைப் பெறுபவராவார். அவர்தாம் முதன்முதலில் ஒரே பிரதியில் குர்ஆனை ஒருங்கிணைத்தவர்.'

அபூ பக்ரின் காலத்தில் திருக்குர்ஆன் தொகுக்கப்பட்டதற்கான காரணம்

யமாமா போரில் குர்ஆனை மனனம் செய்தவர்கள் அதிக எண்ணிக்கையில் கொல்லப்பட்டதனால் குர்ஆனின் சில பகுதிகள் காணாமல் போய்விடுமோ என்று நபித்தோழர்களுக்கு ஏற்பட்ட அச்சமே அபூ பக்ரின் காலத்தில் திருக்குர்ஆன் தொகுக்கப்பட்டதற்கான முக்கியக் காரணமாகும். இந்த அச்சத்தை உமர் இப்னுல் கத்தாப் பின்வருமாறு வெளிப்படுத்தினார், 'உக்கிரமமான இந்தப் போரில் குர்ஆனை மனனம் செய்தவர்கள் அதிக அளவில் கொல்லப்பட்டுவிட்டார்கள். மேலும் பல இடங்களில் குர்ஆனை மனனம் செய்தவர்கள் கொல்லப்பட்டுவிட்டால் குர்ஆனின் சில பகுதிகள் அழிந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.'

ஸைது இப்னு ஸாபித் ﷺ தெரிவு செய்யப்படுவதற்கான காரணம்

அபூ பக்ரின் கூற்றிலிருந்து ஸைது இப்னு ஸாபித் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணத்தை அறிந்துகொள்ளலாம். அவர் கூறினார்,